தினமணி

**மேட்டூர் அணையில் தண்ணீர் திறப்பு நிறுத்தம்**

First Published : 19 Jan 2012 01:19:26 PM IST

மேட்டூர், ஜன. 18: மேட்டூர் அணையின் கிழக்கு மேற்கு கால்வாய்களில் பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடுவது புதன்கிழமை மாலை நிறுத்தப்பட்டது.

மேட்டூர் அணையின் கிழக்கு மேற்கு கால்வாய் மூலம் சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்டங்களில் 45 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது.

ஆண்டுதோறும் ஆகஸ்ட் 1-ம் தேதி முதல் டிசம்பர் 15-ம் தேதி வரை பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும். நடப்பு ஆண்டில் ஆகஸ்ட் 2-ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று தண்ணீர் திறப்பு டிசம்பர் 31-ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டது. ஆனால், கோல்நாயக்கன்பட்டி ஊராட்சியில் சுமார் 400 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் பலன்தரும் நிலையில் இருந்ததால் ஜனவரி 6-ம் தேதி முதல் மீண்டும் தண்ணீர் திறக்கப்பட்டது.

இந்நிலையில், புதன்கிழமை மாலை 6 மணி முதல் தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டது. அப்போது மேட்டூர் அணையின் நீர்மட்டம் 92.51 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 964 கனஅடி தண்ணீர் வந்துக் கொண்டிருந்தது. நீர் இருப்பு 55.56 டிஎம்சி-யாக இருந்தது.

**இயற்கை வேளாண்மை விளக்க வயல் விழா**

First Published : 19 Jan 2012 01:18:24 PM IST

மன்னார்குடி, ஜன. 18: திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியத்திற்கு உள்பட்ட பெருகவாழ்ந்தான் கிராமத்தில் இயற்கை வேளாண்மை விளக்க வயல் விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு திருவாரூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் கே. மயில்வாகனன் தலைமை வகித்தார்.

காவிரி டெல்டா பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் எஸ். ரங்கநாதன், ஏ.எஸ். பண்ணை மேலாளர் எஸ். சந்தானகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மண் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையத் தலைவர் பி. சந்திரசேகரன், டிராய் பயோடெக் நிர்வாகி ஆர். குழந்தைசாமி, வேளாண்மை உதவி இயக்குநர்கள் (கோட்டூர்) ஆர். பரமசிவம், (மன்னார்குடி) டி. நடேசன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்துகொண்டனர்.

பெருகவாழ்ந்தான் கிராமத்தில் எஸ். ரங்கநாதனுக்கு சொந்தமான வயலில் சுமார் 30 ஏக்கருக்கு அம்பாசமுத்திரம் 19 வகை நெல் நடவுசெய்யப்பட்டது.

இதற்கு, இயற்கை நுண்ணுயிர் உரமும், பூச்சிக்கொல்லி மட்டும் பயன்படுத்தியதால் நோய் தொற்று இல்லாத ரசாயன பாதிப்பு ஏற்படாத ஏக்கருக்கு 2400 கிலோ தரமான நெல் மணிகள் கிடைத்தன.

மேலும், உற்பத்தி செலவு குறைந்திருப்பதுடன் வியாபாரிகள் விரும்பி முன்வந்து இந்த நெல்லை கொள்முதல் செய்கிறார்கள் என்பது இந்த நிகழ்ச்சியில் விளக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் திரளான விவசாயிகள், விவசாய, இயற்கை ஆர்வலர்கள் கலந்துகொண்டனர்.

**வம்பனில் ஜன. 24-ல் ரோஜா சாகுபடி பயிற்சி**

First Published : 19 Jan 2012 01:05:20 PM IST

புதுக்கோட்டை, ஜன. 18: புதுக்கோட்டை அருகேயுள்ள வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் ரோஜா சாகுபடி, அறுவடைக்கு பின்சார் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி முகாம் ஜனவரி 24 ஆம் தேதி நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ப. மகேஸ்வரி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்டத்தில் பரவலான இடங்களில் ரோஜா மலர் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மாலைகள் தொடுப்பதற்கும், வழிபாடுகளுக்கும் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. விவசாயிகள் சாகுபடியில் பல்வேறு பிரச்னைகளை எதிர்கொள்ளும் நிலையில், தரமான மலர்களை அதிக மகசூலாக பெறுவதற்கு பல்வேறு நவீனத் தொழில்நுட்பங்களை கடைப்பிடிப்பது அவசியம்.

இதுதொடர்பான பயிற்சி வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் வருகிற (24.1.2012) செவ்வாய்க்கிழமை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற உள்ளது.

இந்தப் பயிற்சியில் புதுக்கோட்டை மாவட்டத்தில் ரோஜா சாகுபடி செய்யும் விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெறலாம். மேலும் விவரங்களுக்கு, 04322- 290321, 9787356981 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம் என்றார் அவர்.

**"நாட்டின் எதிர்காலம் விவசாயிகள் கையில் உள்ளது'**

First Published : 19 Jan 2012 01:11:05 PM IST

வேதாரண்யம், ஜன. 18: நாட்டின் எதிர்காலம் விவசாயிகளின் கையில்தான் உள்ளது என்றார் நாகை மாவட்ட வருவாய் அலுவலர் ஆசியா மரியம்.

நாகை மாவட்டம், வேதாரண்யத்தை அடுத்த பஞ்சநதிக்குளம் நடுச்சேத்தி கிராமத்தில் மக்கள் குறைதீர் நாள் முகாம் புதன்கிழமை நடைபெற்றது. முகாமுக்கு தலைமை வகித்த நாகை மாவட்ட வருவாய் அலுவலர் ஆசியா மரியம் மேலும் பேசியது:

உணவு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், ஆள் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகளை எதிர்கொள்ள நேரிடுகிறது. இப்போது விவசாயிகள் சிரமப்பட்டாலும், எதிர்காலத்தில் அவர்களின் உழைப்புக்கு உயர்வு உண்டு. நாட்டின் வளர்ச்சியும், மக்களின் உணவுத் தேவையும் விவசாயிகள் கையில்தான் உள்ளது. காலத்துக்கு ஏற்ப தொழில்நுட்பங்களைக் கையாண்டு விவசாயம் செய்ய வேண்டும் என்றார் அவர். நிகழ்ச்சியில், ஊராட்சி ஒன்றியத் தலைவர் சுசீலாதேவி சரவணன், வட்டாட்சியர் அ. அசோகன், வட்டார வளர்ச்சி அலுவலர் அரெ. மூர்த்தி, மாவட்ட ஊராட்சி முன்னாள் உறுப்பினர் சி. ஆனந்தராசு, ஒன்றியக் குழு உறுப்பினர் என். சந்திரசேகரன், ஊராட்சித் தலைவர்கள் ரவிச்சந்திரன், சீனிவாசன் உள்ளிட்டோர் பேசினர்.

வேளாண் உதவி இயக்குநர் ப. மணிகண்டன், தோட்டக் கலைத் துறை அலுவலர் சிவராமன் உள்பட பல்வேறு துறை அலுவலர்கள் பங்கேற்று விளக்கம் அளித்தனர். முகாமையொட்டி பெறப்பட்ட 102 மனுக்களில், 50 மனுக்களுக்கு உடனடித் தீர்வு காணப்பட்டது. மருத்துவ முகாம், வேளாண், தோட்டக்கலைத் துறை சார்பில் திட்ட விளக்க கண்காட்சி, ஊட்டச்சத்து உணவுப் பொருள்கள் குறித்த கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

**விவசாயிகளுக்கு கூடுதல் மானியம் வழங்க வலியுறுத்தல்**

First Published : 19 Jan 2012 12:43:26 PM IST

சிவகங்கை, ஜன. 18: விவசாயிகளுக்கு கூடுதல் மானியம், கட்டுப்படியாகும் விலை கொடுக்க வேண்டும் என்று மார்க்சிஸ்ட் பொதுக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

காளையார்கோவில் அருகே உள்ள வெளாரேந்தல் கிராமத்தில் மார்க்சிஸ்ட் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் மாநிலக் குழு உறுப்பினரும், நகர்மன்றத் தலைவருமான எம்.அர்ச்சுணன், மாவட்டச் செயலாளர் எம்.கந்தசாமி, ஒன்றியச் செயலாளர் மெய்ஞானமூர்த்தி, மாவட்டக் குழு உறுப்பினர் எம்.எஸ்.க ண்ணன், ஒன்றியக் குழு உறுப்பினர்கள் சலையத்ராஜ், நல்லெண்ணசாமி

உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். 1958-ல் ஒரு மூட்டை நெல் ரூ.5-க்கு விலை போகும். 3 மூட்டை நெல்லை விற்றால் ஒரு பவுன் தங்கம் (பவுன் ரூ.15) வாங்க முடியும். இப்போது 40 மூட்டை நெல்லை விற்றால்தான் ஒரு பவுன் தங்கம் வாங்க முடியும் என்ற நிலை உள்ளது. இதனால் விவசாயம் செய்யும் ஆர்வம் குறைந்து, பயிர் விளையும் பரப்பும் குறைந்து வருகிறது. இப் பிரச்னையைத் தீர்க்க விவசாயிகளுக்கு அரசு கூடுதல் மானியம் வழங்க வேண்டும். விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகும், நியாயமான விலையைக் கொடுத்து விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும். வெளாரேந்தல் பகுதியில் நெல் கொள்முதல் நிலையம் தொடங்க வேண்டும் என்றார்.

## 12,250 ஹெக்டேரில் சம்பா அறுவடை நிறைவு

First Published : 19 Jan 2012 01:09:16 PM IST

தஞ்சாவூர், ஜன. 18: தஞ்சாவூர் மாவட்டத்தில் 12,250 ஹெக்டேரில் சம்பா நெல் அறுவடைப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன என்றார் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் எஸ். ராஜ்குமார்.

இது தொடர்பாக அவர் புதன்கிழமை கூறியது:

தஞ்சாவூர் மாவட்டத்தில் 1.03 லட்சம் ஹெக்டேரில் சம்பாவும், 76,437 ஹெக்டேரில் தாளடிப் பயிர்களும் அறுவடை செய்யப்பட்டன. புதுஆற்று பாசனம் பெறும் ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, மதுக்கூர், திருவோணம் பகுதிகளில் நடவுப் பணிகள் முன்கூட்டியே முடிந்தது. எனவே, அப்பகுதிகளில் தற்போது அறுவடை தொடங்கியுள்ளது.

திருந்திய நெல் சாகுபடி முறையில் 2,600 ஹெக்டேரில் அறுவடை முடிந்துள்ளது. சம்பா நடவில் அதிகபட்சமாக ஹெக்டேருக்கு 6,850 கிலோ மகசூல் கிடைத்துள்ளது. திருந்திய நெல் சாகுபடி முறையில், ஹெக்டேருக்கு 8,150 கிலோ மகசூல் கிடைத்துள்ளது.

மார்ச் முதல் வாரத்தில் சம்பா, தாளடி அறுவடைப் பணிகள் நிறைவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது அறுவடை செய்யப்படாத பயிர்கள் அனைத்தும் கதிர் விளைந்து காணப்படுவதால், அவற்றிற்கு அதிகளவில் பாசன நீர் தேவையிருக்காது. எனவே, ஜனவரி 28-ம் தேதி மேட்டூர் அணையை மூடுவதால் பாசன நீர் தட்டுப்பாடும், தேவையும் இருக்காது என்றார் ராஜ்குமார்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**வேளாண் துறை திட்டத்திற்கு அறிவிப்பு இல்லை : மனுநீதி நாள் முகாமில் விவசாயிகள் ஆவேசம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 20,2012,01:33 IST

கருத்தை பதிவு செய்ய

பொள்ளாச்சி : "வேளாண் துறை திட்டகள் குறித்து கிராமத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதில்லை' என, மனுநீதி நாள் முகாமில் விவசாயிகள் புகார் செய்தனர்.

பொள்ளாச்சி அடுத்த ஊஞ்சவேலாம்பட்டியில் மனுநீதிநாள் முகாம் நடந்தது. முகாமில், விவசாயிகள் பேசியதாவது:

வேளாண் துறை சார்பில் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றனர். மேலும், உழவர் பாதுகாப்பு திட்டத்தில் பயன்பெறுவதும் குறித்தும், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கும் மானிய திட்டங்கள் குறித்தும் மக்களுக்கு தெரிவிப்பதில்லை. இந்த திட்டங்கள் பற்றி தெரிந்து கொள்ள யாரை அணுக வேண்டும், யாரிடம் விளக்கம் பெற வேண்டும் தெரிவிக்க வேண்டும். மேலும் அரசு மூலம் அறிவிக்கப்படும் மானிய திட்டங்கள், இலவச வேளாண் உபகரணங்கள்,

பொருட்கள் அனைத்தும் ஒருசில விவசாயிகளுக்கு மட்டுமே சென்றடைகிறது.

வேளாண் துறை திட்டங்கள் குறித்து கிராமத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவதில்லை. அரசின் திட்டங்கள் மூலம் அனைத்து விவசாயிகளும் பயன்பெற செய்ய வேண்டும்.

இவ்வாறு, விவசாயிகள்

பேசினர்.

முகாமில் பேசிய தெற்கு ஒன்றிய வேளாண் உதவி அலுவலர் நிர்மலா பேசுகையில், ""அனைத்து கிராமங்களுக்கு நேரடியாக வந்து திட்டங்கள் பற்றி தெரிவிக்க வேளாண் துறையில் ஆட்கள் பற்றாக்குறை உள்ளது.

அதனால், வேளாண் அலுவலகத்தில் தகவல் மையம் அமைக்கப்பட்டு, விவசாயிகளுக்கு தேவையான தகவல் தெரிவிக்கப்படுகிறது. விவசாயிகள் வேளாண் அலுவலகத்திற்கு வந்தால் அனைத்து

விபரங்களையும் தெரிந்து கொள்ளலாம். மானிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டதும், முறையாக அறிவிப்பு கொடுக்கப்படுகிறது" என்றார்.

சப்-கலெக்டர் அருண்சுந்தர் தயாளன் பேசும்போது, ""விவசாயிகளின் பிரச்னைகளை தீர்க்கவும், அரசின் திட்டங்களை தெரிவிக்கவும் சப்-கலெக்டர் அலுவலகத்தில் ஒவ்வொரு மாதமும் விவசாயிகள் முறையீட்டுக்குழு கூட்டம் நடக்கிறது. அந்த கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு திட்டங்களை
விரிவாக தெரிந்து கொள்ளலாம்" என்றார்.

**வெப்பத்தை சமன் செய்யும் தர்பூசணி வரத்து துவக்கம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 19,2012,23:23 IST

கருத்தை பதிவு செய்ய

யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே என்பது போல், வெயில் பருவம் துவங்குவதற்கு முன்னோட்டமாக, தர்பூசணி வரத்து துவங்கியுள்ளது.
மார்கழி மாதத்துடன் குளிர் விட்டுப்போன காலம் இருந்தது. இப்போது பருவம் மாற்றம் கண்டு வருகிறது. தையில் இதமான வெயில் துவங்கும். ஆனால் பருவம் மாறியுள்ளது. தை பிறந்தபின்னும் இரவிலும், அதிகாலையிலும், கடும் பனிப்பொழிவு ஏற்பட்டு, சென்னை வாசிகள் நடுங்கிக் கொண்டிருக்கின்றனர்.

மதிய வேளையில் வெயில் சுள்ளென்று சுடத் துவங்கிவிட்டது.இன்னும் சில நாட்களில் வெயில் சுட்டெரிக்க ஆரம்பித்து விடும். வெயில் வரவை முன்னறிவித்து, பருவகால சிரமங்களை சமன்படுத்தும் விதமாக பழங்கள் வருவது வழக்கம். அந்த வகையில் சென்னைக்கு, தர்பூசணி பழங்கள் வரத்து துவங்கியுள்ளது. பெரம்பூர் பேரக்ஸ் சாலை உட்பட பல இடங்களில் இவை குவித்து விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.சில நாட்களில், சென்னையில், தர்பூசணி பழங்கள் விற்பனை தீவிரமாகும். தற்போது, ஊத்துக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளிலிருந்து தர்பூசணி கொண்டு வரப்படுகிறது. ஒரு கிலோ 10 முதல், 15 ரூபாய் வரை விற்கப்படுகிறது. நடுத்தர அளவுள்ள ஒரு தர்பூசணி பழம் தற்போது, 100 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. வரத்து அதிகரித்தால் விலை குறையும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

**பசுமை வீடுகள் திட்டம்: அரசு வெளியிட்டுள்ள நிபந்தனைகள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 20,2012,01:21 IST

பொள்ளாச்சி : "பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீட்டினை வேறு நபர்களுக்கு விற்பது, அடமானம் வைப்பது, வாடகைக்கு விடுவது போன்ற செயல்களில் ஈடுபட்டால், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்' என, திட்டம் குறித்து அரசு வெளியிட்ட நிபந்தனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில், கிராமத்தில் வறுமை கோட்டிற்கு கீழ் வசிக்கும் 300 சதுர அடி நிலம் சொந்தமாக வைத்துள்ள பயனாளிகள், அரசின் "சூரிய ஒளிசக்தியுடன் கூடிய பசுமை வீடுகள்' கட்டும் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். நடப்பாண்டில், மொத்தம் 60 ஆயிரம் வீடுகள் கட்டப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான இடம் அளவீடு செய்து பணி துவங்க உத்தரவு வழங்கப்பட்டு வருகிறது. இதற்கிடையில், இத்திட்ட பயனாளிகளுக்கான நிபந்தனைகள் குறித்து அரசு சுற்றறிக்கை வெளியிட்டுள்ளது. ஒன்றிய அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள நிபந்தனை குறிப்பை, அனைத்து பயனாளிகளுக்கும் தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பசுமை வீடுகள் திட்டம் குறித்து அரசு வெளியிட்டுள்ள நிபந்தனைகள்:

பசுமை வீடுகள் கட்ட தேர்வு செய்யப்பட்ட பயனாளிகள் அரசின் வழிகாட்டி நெறிமுறைக்கு உட்பட்டு வீடுகளை கட்ட வேண்டும். வீட்டினை பயனாளி தாமாகவோ அல்லது முகவர் மூலமாகவோ கட்டி கொள்ள வேண்டும்.வீடுகள் 300 சதுர அடிக்கு குறையாமல், பட்டா உடைய பயனாளிக்கு

ஏற்கனவே கட்டப்பட்ட வீட்டிற்கு பதிலாகவோ அல்லது காலியாகவே உள்ள இடத்தில் கட்ட வேண்டும். வீட்டில், வராண்டா, முகப்பு அறை, படுக்கையறை, சமையலறை மற்றும் கழிவறை ஆகிய ஐந்து அறைகள் கொண்ட கட்டடமாக இருக்க வேண்டும்.

வீட்டிற்கு மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்க வேண்டும். வீடு கட்டுமான பணிக்கான இரும்பு கம்பி, சிமென்ட், கதவு, ஜன்னல் ஆகியவை ஒன்றியம் மூலம் வழங்கப்படும். இவற்றுக்கான தொகை பயனாளிகளுக்கு வழங்கப்படும் மானியத்தில் பிடித்தம் செய்யப்படும்.

கட்டப்படும் வீட்டிற்கான தொகை, அடித்தளம், கூரை அளவு, கான்கிரீட் கூரை முடிக்கப்பட்ட பின்னும், இறுதி நிலை என நான்கு கட்டங்களில் வட்டார வளர்ச்சி அலுவலர் மூலம் வழங்கப்படும். வீடுகளை மூன்று மாதத்திற்குள் கட்டி முடிக்க வேண்டும். கட்டுமான பணிகள் நிறைவடைந்தவுடன், அனைவருக்கும் தெரியும் வகையில், "செராமிக் டைல்சில்' அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திற்கான சின்னத்தை வீட்டின் முகப்பில் பதிக்க வேண்டும்.

கட்டி முடிக்கப்பட்ட வீட்டை வேறு நபர்களுக்கு வாடகைக்கு விடுவது, அடமானம் வைப்பது, விற்பனை செய்வது உள்ளிட்ட நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது. இதுபோன்று ஈடுபடும் பயனாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். வீட்டின் வெளிப்புறத்தில், பயனாளியின்

பெயர், வீடு கட்டப்பட்ட ஆண்டு, திட்டத்தின் பெயர் அடங்கிய விபரங்கள் பெயிண்ட் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

## சிறு, குறு விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசனம் மானியம் 100 சதவீதம்: உதவி இயக்குனர் தகவல்

பதிவு செய்த நாள் : ஜனவரி 20,2012,02:41 IST

கருத்தை பதிவு செய்ய

லாலாப்பேட்டை: "கிருஷ்ணராயபுரம் வட்டாரத்தில் உள்ள சிறு, குறு விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசனம் அமைக்க 100 சதவீதம் மானியம் வழங்கப்படுவதாக' வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜேந்திரன் அறிக்கை: சொட்டுநீர் பாசனம் முறையில் நீரை சிக்கனப்படுத்தி பயிர் சாகுபடி பரப்பினை அதிகரிக்கலாம், களைகள் கட்டுப்படுத்துப்படுகிறது. வேலை ஆட்களின் செலவு குறைகிறது. எனவே, விவசாயிகள் சொட்டுநீர் பாசனம் அமைத்து உற்பத்தியை அதிகரிக்க முடியும். இதற்கு இந்த ஆண்டு சிறு, குறு விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசனம் அமைக்க தமிழக அரசு 100 சதவீதம் மானியம் வழங்குகிறது. சொட்டுநீர் பாசனம் முறையில் காய்கறி பயிர்கள், பழ மரங்கள், தென்னை, மரவள்ளி, மஞ்சள், வாழை, கரும்பு போன்ற பயிர்களை சாகுபடி செய்யலாம். சிறு, குறு விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசனம் அமைக்க 100 சதவீதம் மானியமாக ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக மானியத்தொகை ரூபாய் 43 ஆயிரத்து 816 ரூபாய் வழங்கப்படுகிறது. பயிர் இடைவெளியை பொறுத்து ஒரு ஏக்கர் முதல் 5 ஏக்கர் வரை சொட்டு நீர் பாசனம் அமைக்கலாம். பயிர் சாகுபடிக்கு போதுமான நீர்வசதி இருக்க வேண்டும். பெண்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், முன்னாள் ராணுவத்தினர், மாற்றுத்திறனாளி விவசாயிகளுக்கு இந்த திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தில் பயன்பெறும் விவசாயிகள் சிறு, குறு விவசாயிகளுக்கான சான்றிதழ், நிலம் அமைந்துள்ள கிராமம் இருக்கும் தாசில்தாரிடமிருந்து பெறப்பட வேண்டும். நிலத்தின் சிட்டா, அடங்கல், வரைபடம் ஆகியவற்றினை வருவாய்துறையினரிடமிருந்து பெற்று ரேஷன் கார்டு நகல், சமீபத்தில் எடுக்கப்பட்ட 3 பாஸ்போர்ட் சைஸ் ஃபோட்டோ விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். இந்த திட்டத்தில் பயன் பெற விரும்பும் விவசாயிகள் கிருஷ்ணராயபுரம் வட்டார தோட்டக்கலைத்துறை அலுவலர்களை அணுகலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**ரோஜா சாகுபடிக்கான நவீன தொழில்நுட்ப பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 20,2012,02:50 IST

கருத்தை பதிவு செய்ய

புதுக்கோட்டை: வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் ரோஜா சாகுபடிக்கான நவீன தொழில்நுட்பங்கள் குறித்த விவாசாயிகளுக்கான பயிற்சி முகாம் 24ம் தேதி நடக்கிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் கொத்தமங்கலம், கீரமங்கலம், கறம்பக்குடி உள்ளிட்ட பகுதிகளில் ரோஜா மலர் அதிகளவு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. ரோஜா மலர்களின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் இதன் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை வம்பன் வேளாண் அறிவியல் நிலையம் துவக்கியுள்ளது. இதற்காக நவீன தொழில் நுட்பத்தின் மூலம் ரோஜா செடிகளை சாகுபடி செய்து குறைந்த செலவில் தரமான ரோஜா மலர்களை உற்பத்தி செய்சவதற்கான வழிமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு வரும் 24ம் தேதி பயிற்சி அளிக்கப்படுகிறது. மாவட்டத்தில் ரோஜா சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் பயிற்சி முகாமில் கலந்துகொண்டு பயன்பெறலாம்.

**வெங்காயம் பயிரிட்ட விவசாயிகள் ஏமாற்றம் : திண்டுக்கல்லையும் விடவில்லை "தானே'**

பதிவு செய்த நாள் : ஜனவரி 19,2012,23:08 IST

கருத்தை பதிவு செய்ய

ஒட்டன்சத்திரம் : கடந்த ஆண்டு கைதூக்கி விட்ட பெரிய வெங்காயம், இந்த ஆண்டு கவலையை உருவாக்கியுள்ளது. விலை சரிவால் திண்டுக்கல் மாவட்ட விவசாயிகள் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

ஒட்டன்சத்திரம் காளாஞ்சிபட்டி, பாவாயூர், அத்திக்கோம்பை, சாலைப்புதூர், அம்பிளிக்கை உள்ளிட்ட இடங்களில் பெரிய வெங்காயம் (பெல்லாரி) அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. நட்ட 90 முதல் 100 நாட்களுக்குள் மகசூலுக்கு தயாராகிவிடும்.

கைகொடுத்தது: கடந்த ஆண்டு மகசூல் குறைந்திருந்த போதும், அதிக விலை கிடைத்தது. இதனால் விளைந்தும் விளையாத காய்களை பறித்து சந்தைக்கு கொண்டு சென்றனர். இவை கிலோ 50 ரூபாய் வரை விற்றன. முதற்கட்டமாக நட்ட விவசாயிகளுக்கு மகசூல் கிடைக்காவிட்டாலும், உச்ச விலை, கைகொடுத்து காப்பாற்றியது.

**விலை இல்லை**: இந்த ஆண்டு, "தானே' புயல் மழையால் விளைச்சல் பாதிக்கப்பட்டது. இதில் இருந்து தப்பிய காய்களுக்கும் போதிய விலை இல்லை.

இதனால் சில இடங்களில், விளைந்த வெங்காயத்தை அறுவடை செய்யாமல் காலம் தாழ்த்தி

வருகின்றனர். கடந்த ஆண்டு விளைச்சல் குறைந்திருந்த போதும், விலை அதிகமாக விற்றதால், நஷ்டத்தில் இருந்து விவசாயிகள் தப்பினர். ஆனால், இந்த ஆண்டு, விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

ஒட்டன்சத்திரம் விவசாயி கதிரொளி கூறுகையில், ""சமீபத்தில் ஏற்பட்ட புயல் மழையால் நிலத்தில் நீர் தேங்கி, காய்கள் அழுகிவிட்டன. விலையும் குறைவாக இருப்பதால் பெருத்த நஷ்டம் ஏற்படும்," என்றார்.

அம்பிளிக்கை விவசாயி திருமூர்த்தி கூறுகையில், ""கிலோ 10 ரூபாய்க்கும் கீழ் விற்பதால் விளைந்த காய்களை அறுவடை செய்யாமல் விட்டுள்ளேன். கூலி ஆட்கள் சம்பளம் 200 ரூபாய்க்கு உயர்ந்துள்ளது. அறுவடை செய்தால் நஷ்டம் ஏற்படும். விலை உயர்ந்தால் பறித்து சந்தைக்கு அனுப்புவேன்," என்றார்.

கமிஷன் கடை உரிமையாளர் செல்வம் கூறுகையில், ""பிற மாநிலங்களில் விளைச்சல் நன்றாக உள்ளது. ஏற்றுமதி இல்லாததால் விலை குறைவாகவே உள்ளது," என்றார்.

கடந்த ஆண்டு, ஒரு கிலோ 70 ரூபாய்க்கு விற்றது. தற்போது, 10 ரூபாய்க்கு விற்பதால் விவசாயிகள் செய்வதறியாது தவிக்கின்றனர்.

---

தினகரன்

**முட்டை விலை 25 காசு சரிவு**

பதிவு செய்த நாள் : 1/20/2012 1:23:45 AM



நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 295 காசுகளில் இருந்து சரிந்து 270 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணயக்குழு கூட்டம் நேற்று நடந்தது.

இதில் பண்ணையாளர்கள், வியாபாரிகள் கலந்து கொண்டு ஆலோசித்தனர். அப்போது, பிற மண்டலங்களில் முட்டை விலை குறைந்து வருவதால் நாமக்கல் மண்டலத்திலும் முட்டை விலையை குறைப்பது என முடிவு செய்யப்பட்டது. அதன்படி, 295 காசுகளாக உள்ள முட்டை விலையில் 25 காசுகள் குறைக்கப்பட்டு ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 270 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது.

**உணவு பணவீக்கம் மைனசில் நீடிப்பு**

பதிவு செய்த நாள் : 1/20/2012 1:23:03 AM



புதுடெல்லி : உணவு பணவீக்கம் தொடர்ந்து 3 வாரமாக மைனசில் நீடிக்கிறது. கடந்த 7ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் இது (&)0.42 சதவீதமாக இருந்தது. முந்தைய வாரத்தில் இது (&)2.9 சதவீதமாக இருந்தது. கடந்த 2011ம் ஆண்டின் இதே காலத்தில் இது 16 சதவீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டின் இதே காலத்தோடு ஒப்பிடும்போது வெங்காயம் விலை 75.42 சதவீதமும், உருளைக்கிழங்கு 23.84 சதவீதமும், கோதுமை 3.57 சதவீதமும் குறைந்துள்ளது. ஒட்டுமொத்த காய்கறிகளின் விலை 45.81 சதவீதமும் சரிந்துள்ளது. அதேநேரம் பருப்பு வகைகள் 14.27 சதவீதமும், பால் 11.48 சதவீதமும், முட்டை, இறைச்சி மற்றும் மீன் விலை 19.64 சதவீதமும், பழங்கள் விலை 10 சதவீதமும் உயர்ந்துள்ளது.

---

## உற்பத்தி அதிகரிப்பால், 2012–ஆம் ஆண்டில் உலக அளவில், உணவு தானியங்கள் விலை 11 சதவீதம் குறைய வாய்ப்பு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

உலக அளவில் நடப்பு 2012–ஆம் ஆண்டில், அரிசி, கோதுமை உள்ளிட்ட உணவு தானியங்கள் விலை 11 சதவீதம் குறைய வாய்ப்புள்ளது என்று உலக வங்கி முன்னறிவிப்பு செய்துள்ளது.

உரங்கள்

உலக வங்கி இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில், "சர்வதேச பொருளாதார மந்தநிலையால், கச்சா எண்ணெய் தேவைப்பாடு சரிவடைந்து அதன் விலை குறையும். மேலும், உரங்கள் விலையும் குறைய வாய்ப்புள்ளது. 2011–12–ஆம் வேளாண் பருவத்தில் உணவு தானியங்கள் உற்பத்தி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுபோன்ற காரணங்களால், இவ்வாண்டில் உணவு தானியங்கள் விலை குறைய வாய்ப்புள்ளது" என்று குறிப்பிட்டுள்ளது. உலக வங்கியின் மதிப்பீட்டின்படி, இவ்வாண்டில் கோதுமை மற்றும் மக்காச்சோளம் விலை முந்தைய ஆண்டை காட்டிலும் முறையே 9 சதவீதம் மற்றும் 12 சதவீதம் குறையும் என தெரிய

வந்துள்ளது.

மூன்றாவது இடம்

மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு அடிப்படையில் ஆசியாவில் மூன்றாவது இடத்தில் உள்ள இந்தியாவில் உணவு தானியங்கள் உற்பத்தி சிறப்பான அளவில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனையடுத்து, கோதுமை, அரிசி ஏற்றுமதி மீது கடந்த நான்கு ஆண்டுகளாக விதிக்கப்பட்டிருந்த தடையை கடந்த 2011 செப்டம்பர் மாதம் சில நிபந்தனைகளுடன் மத்திய அரசு தளர்த்தியது. மேலும், சர்வதேச அளவில் உற்பத்தி உயர்ந்து வருகிறது. இதனையடுத்து, அரிசி விலை 6 சதவீதம் குறையும் என உலக வங்கி தெரிவித்துள்ளது.

சமையல் எண்ணெய் வகைகளில் சர்வதேச அளவில் சோயா எண்ணெய் மற்றும் பாமாயில் விலை முறையே 16 சதவீதம் மற்றும் 20 சதவீதம் குறையும் என கணிக்கப்பட்டுள்ளது. கோகோ, காபி, தேயிலை ஆகியவற்றின் விலை முறையே 11 சதவீதம், 17 சதவீதம் மற்றும் 4 சதவீதம் குறையும் என உலக வங்கி தெரிவித்துள்ளது.

கிரீஸ், இத்தாலி உள்ளிட்ட சில ஐரோப்பிய நாடுகள் கடன் சுமையில் சிக்கி தவிக்கின்றன. இதனையடுத்து, சர்வதேச அளவில் மோட்டார் வாகனங்கள் மற்றும் ஆயத்த ஆடைகள் விற்பனை சரிவடைந்து வருகிறது. இதன் காரணமாக, பருத்தி மற்றும் ரப்பருக்கான தேவைப்பாடு மிகவும் சரிவடைய உள்ளது. அதேசமயம், இவற்றின் உற்பத்தி அதிகரித்து வருகிறது. எனவே, விலை தலா 30 சதவீதம் குறையும் என உலக வங்கி முன்னறிவிப்பு செய்துள்ளது.

கடந்த 2011–ஆம் ஆண்டில் வேளாண் விளை பொருள்கள் விலை மிகவும் உயர்ந்ததையடுத்து, விவசாயிகளுக்கு நல்ல ஆதாயம் கிடைத்தது. இதனை வெளிப்படுத்துகின்ற வகையில், கடந்த 2011–ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டில், விளைபொருள்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு இதுவரை கண்டிராத வகையில் 45,000 கோடி டாலராக உயர்ந்திருக்கும் என தெரிகிறது.

எனவே, நடப்பு 2011–12–ஆம் வேளாண் பருவத்தில் சர்வதேச அளவில் உணவு தானியங்கள் உற்பத்தி அதிகரிக்கும் என அமெரிக்க வேளாண் துறை அதன் முதல் கட்ட மதிப்பீட்டில் தெரிவித்துள்ளது.

மக்காச்சோளம்

மக்காச்சோளம் உற்பத்தி 6.4 சதவீதமும், கோதுமை உற்பத்தி 3.3 சதவீதமும், அரிசி உற்பத்தி 1.4 சதவீதமும் உயரும் என மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.


இந்தியா, சீனா உள்ளிட்ட வளர்ந்து வரும் நாடுகளுக்கு பணவீக்கம் அதிகமாக இருப்பது ஒரு சவாலாக உள்ள நிலையில், நடப்பு வேளாண் பருவத்தில் உணவு தானியங்கள் உற்பத்தி அதிகரிக்கும் என்ற மதிப்பீடு மகிழ்ச்சி தரக்கூடிய செய்தி என பொருளியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தியா – சீனா

பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில், இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை பல முறை உயர்த்தியதையடுத்து, பொருளாதார வளர்ச்சி வேகம் குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

---

## ஜனவரி 7–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் உணவு பணவீக்கம் –0.42 சதவீதம்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

ஜனவரி 7–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், உணவு பணவீக்கம் –0.42 சதவீதமாக உள்ளது. இது, டிசம்பர் 31–ந் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் –2.90 சதவீதமாகவும், அதற்கு முந்தைய வாரத்தில் –3.26 சதவீதமாகவும் இருந்தது. ஆக, தொடர்ந்து மூன்றாவது வாரமாக உணவு பணவீக்கம் மைனசாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

காய்கறி

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், ஓர் ஆண்டு கால அடிப்படையில் வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு விலை முறையே 75.42 சதவீதம் மற்றும் 23.84 சதவீதம் குறைந்ததையடுத்து, ஒட்டுமொத்தத்தில் காய்கறி விலை 45.81 சதவீதம் குறைந்துள்ளது.

கோதுமை விலை 3.57 சதவீதம் குறைந்தது.

உணவு பணவீக்கம் சரிவடைந்து வரும் நிலையில், கடந்த 2011 டிசம்பர் மாதத்தில் பொது பணவீக்கம் இரண்டு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 7.47 சதவீதமாக குறைந்தது. எனவே, இம்மாதம் 24–ந் தேதி வெளியிடும் பணக் கொள்கை ஆய்வு அறிக்கையில் பாரத ரிசர்வ் வங்கி முக்கிய கடன்களுக்கான வட்டியை குறைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.

கரீஃப் பருவத்தில் உணவு தானியங்கள் உற்பத்தி நன்றாக இருந்ததும், உணவு பணவீக்கம் சரிந்துள்ளதற்கு ஒரு முக்கிய காரணமாகும். அதேசமயம், கடந்த 2011–ஆம் ஆண்டின் இதே வாரத்தில் இது 16 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்தது. இதன் காரணமாக, இதனுடன் ஒப்பிடும்போது உணவு பணவீக்கம் குறைந்துள்ளதாக தோன்றுகிறது.

இதனை வெளிப்படுத்துகின்ற வகையில், மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் இதர உணவு பொருள்கள் விலை மிகவும் அதிகமாக உள்ளது. கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், ஓர் ஆண்டு கால அடிப்படையில் பருப்பு வகைகள் மற்றும் பால் விலை முறையே 14.27 சதவீதம் மற்றும் 11.48 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், முட்டை, மீன், இறைச்சி ஆகிய அசைவ உணவு பொருள்கள் விலை 19.64 சதவீதம் அதிகரித்துள்ளது. பழங்கள் விலை 10.03 சதவீதமும், தானியங்கள் விலை 2.26 சதவீதமும் உயர்ந்துள்ளது.

முதன்மை பொருள்கள்

பொது பணவீக்கத்தை கணக்கிடுவதில் 20 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ள முதன்மை பொருள்கள் பணவீக்கம் ஜனவரி 7–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 2.47 சதவீதமாக அதிகரித்துள்ளது. முந்தைய வாரத்தில் இது 0.51 சதவீதமாக இருந்தது. எண்ணெய் வித்துக்கள் உள்ளிட்ட உணவு சாரா பொருள்கள் பணவீக்கம் 1.29 சதவீதத்திலிருந்து 1.84 சதவீதமாக உயர்ந்துள்ளது. எரிசக்தி மற்றும் எரிபொருள் பணவீக்கம் முந்தைய வாரத்தைப் போன்று 14.45 சதவீதமாக உள்ளது.